மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை தீர்ப்பாயம்

மோட்டார் வாகன விபத்து வழக்குகள்

சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்: I, விழுப்புரம்

முன்னிலை : **திரு. N.**வெங்கடேசன், **D.C.BA.,M.L.,P.G.D.C.L.C.F.,**
சிறப்பு சார்பு நீதிபதி எண்.1
சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்.1,
(மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை வழக்குகள்),
விழுப்புரம்.

2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 29 ஆம் நாள் புதன்கிழமை.

MCOP.No.70/2024
(CNR.No.TNVP07-000177-2024)

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் Tr.CMP.No.264 முதல் 281/2020 மனுக்களில் 11.05.2020 தேதியில் பிறப்பித்த தீர்ப்பின் வழிகாட்டுதலின் அடிப்படையில் பிறப்பிக்கபடும் உத்தரவு படிவம்:

(1)	இழப்பீடு கோருபவரின் பெயர் மற்றும் முகவரி:	கிருஷ்ணன் த/பெ தேவராஜ், வயது 25, எண்.144, மாரியம்மன் கோயில் தெரு, ஆலங்குப்பம் கிராமம், அரசூர் அஞ்சல், திருவெண்ணெய்நல்லூர் தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம்.
(2)	1 ஆம் எதிர்மனுதாரரின் பெயர் மற்றும் முகவரி:	ஏழுமலை த/பெ காசிலிங்கம், எண்.5, லஷ்மணன் நகர், கிழக்கு மெயின் ரோடு, Peravallur ஜவஹர் தெரு, சென்னை.
(3)	2 ஆம் எதிர்மனுதாரரின் பெயர் மற்றும் காப்பீடு நிறுவனத்தின் முகவரி:	கிளை மேலாளர், ரிலையன்ஸ் ஜென்ரல் இன்சுரன்ஸ் கம்பெனி லிமிடெட், பழைய எண்.398, புதிய எண்.824/1, 3 வது தளம், R.N.G.டவர், நந்தனம், அண்ணா சாலை, சென்னை.
(4)	இழப்பீடு கோரிக்கை மனு தாக்கல் செய்த தேதி	13.06.2022 மற்றும் 01.11.2022
(5)	உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதி	29.07.2026
(6)	பிறப்பிக்கப்பட்ட இழப்பீட்டு தொகை	ரூ.2,97,500/- (ரூபாய் இரண்டு இலட்சத்து

N
VENKATESAN
Digitally signed by
N VENKATESAN
Date: 2026.07.31
11:06:43 +0530

	விபரம்	தொண்ணுாற்று ஏழாயிரத்து ஐநூறு மட்டும்)
(7)	இழப்பீடு செலுத்த வேண்டிய எதிர்மனுதாரர்	மனுதாரருக்கு, 2ம் எதிர்மனுதாரர் 50% இழப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகின்றது. மேற்படி இழப்பீட்டு தொகையை பின்னிட்டு 1ஆம் எதிர்மனுதாரரிடமிருந்து 2ஆம் எதிர்மனுதாரர் வசூல் செய்துகொள்ள வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.
(8)	வட்டி விகிதம்	ஆண்டிற்கு 7.5% 13.06.2022 மற்றும் 01.11.2022 தேதி முதல் தொகை செலுத்தும் தேதி வரை
(9)	இழப்பீடு தொகை வைப்பீடு மற்றும் வழங்குதல்	NEFT அல்லது RTGS ஆகிய E-Transfer முறையில்
(10)	வழக்கறிஞர் ஊதியம் மற்றும் வழக்கு செலவுத்தொகை	வழக்கறிஞர் கட்டணம் ரூ.18,375/-, மனுதாரர் செலுத்திய நீதிமன்றக்கட்டணம் ரூ.373/- மற்றும் வழக்கு செலவுத் தொகை ரூ.199/-ஆக மொத்தம் ரூ.18,947/-ஐ 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.
(11)	மனு மீது செலுத்தப்பட்ட நீதிமன்றக்கட்டணம்	மனுதாரர் செலுத்தவேண்டிய மொத்த நீதிமன்ற கட்டணம் ரூ.2,348/- மனுதாரர் நீதிமன்றக் கட்டணமாக ரூ.373/- செலுத்தியுள்ளார். மனுதாரர் செலுத்தவேண்டிய இழப்பீடு தொகைக்குரிய குறைவு நீதிமன்றக்கட்டணம் ரூ.1975/- ஆகும். மனுதாரர் செலுத்த வேண்டிய குறைவு நீதிமன்றக் கட்டணம் ரூ.1975/-ஐ 2ஆம் எதிர்மனுதாரர் தீர்ப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்கு E-Court fees link pay.ecourts.gov.in என்ற இணையதளத்தின் மூலம் செலுத்த வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

இம்மனுவானது கடந்த 15.07.2026 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர்.செல்வமணி அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரரை 15.03.2023ம் தேதி நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் தோன்றாதரப்பினராக கருதப்பட்டு ஒருதலைபட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டும். 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.தனராஜன் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதுரைகள் கேட்டறிந்தும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரான பரிசீலனையிலிருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

உத்தரவு

இம்மனு கடந்த 28.02.2022 ஆம் தேதியன்று ஏற்பட்ட சாலை விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு நஷ்டஈடாக ரூ.10,00,000/-வழங்க கேட்டு எதிர்மனுதாரர்கள் மீது மோட்டார் வாகன சட்டப்பிரிவு 166(1)-ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. மனுவின் சுருக்கம்:

கடந்த 28.02.2022ம் தேதியன்று மாலை சுமார் 4.30 மணியளவில் மனுதாரர் TN15A1057 என்ற எண்கொண்ட இருசக்கர மோட்டார் சைக்கிள் வாகனத்தில் தனது சொந்த வேலையாக அரசூர்-பண்ருட்டி சாலைக்கு சென்று வேலை முடிந்து மீண்டும் வீட்டிற்கு வருவதற்காக சென்னை-திருச்சி மெயின் ரோட்டை கடப்பதற்காக அரசூர் பேருந்து நிறுத்தம் அருகே நின்றபோது அச்சமயம் 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN11X0389 என்ற பதிவெண் கொண்ட டெம்போ டிராவலர் வேன் வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்ரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து மனுதாரர் ஓட்டிச்சென்றுக்கொண்டிருந்த இருசக்கர மோட்டார் சைக்கிள் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தில் மனுதாரருக்கு வலது பக்க மார்பு, வலது கணுக்கால், இடது தொடை, இடுப்பு ஆகிய இடங்களில் அடியும் மற்றும் உடல் முழுவதும் பலத்த காயங்களும் ஏற்பட்டது. விபத்து ஏற்பட்டவுடன் மனுதாரர் விழுப்புரம், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. விபத்திற்கு 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவும், அதிவேகமும், அஜாக்ரதையும்தான் காரணம். விபத்து குறித்து திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் குற்ற எண்.149/2022 என்னும் வழக்கை பிரிவுகள் 279,337 மற்றும் 338 இ.த.ச.வின்படி 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த மனுவின் மனுதாரர் தனக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து இழப்பீடாக ரூ.10,00,000/- வழங்க கோரியுள்ளார்.

2. வழக்கு 2ம் எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம்:

இந்த 2ஆம் எதிர்மனுதாரருக்கு எதிரான இழப்பீட்டு மனு நியாயமானதும் அல்ல, முறையானதும் அல்ல. கடந்த 28.02.2022 அன்று மாலை சுமார் 4.30 மணியளவில் மனுதாரர் TN15A1057 என்ற எண்கொண்ட இருசக்கர மோட்டார் சைக்கிள் வாகனத்தில்

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2026.07.31 11:06:55 +0530

சென்றுக்கொண்டிருந்தபோது 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN11X0389 என்ற பதிவெண் கொண்ட டெம்போ டிராவலர் வேன் வாகனம் மனுதாரர் மீது மோதி தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடு கோரி கோரிக்கை மனுவை தாக்கல் செய்துள்ளார். திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலைய குற்ற எண்.149/2022 -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை வேன் வாகன ஓட்டுநருக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், கிடைக்கப்பெற்ற விபத்துப் பதிவேட்டின்படி, மனுதாரர் 28.02.2022 அன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். திருத்தப்பட்டமோட்டார் வாகன சட்டம் பிரிவு 166(3)-ன்கீழ், விபத்து நடந்த 6 மாதங்களுக்கு பிறகு இழப்பீடு கோரும் எந்தவொரு விண்ணப்பமும் பரிசீலிக்கப்படாது என்று மனுதாரர் சமர்ப்பித்தார். மேலும் சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் ஏற்கனவே 01.04.2022 முதல் அமலுக்கு வந்த மோட்டார் வாகன சட்டத்தின் புதிய திருத்தப்பட்ட விதிகளை 25.02.2022 S.O.859(E) தேதியிட்ட Extraordinary Gazette Notification மூலம் இதனை அறிவித்துள்ளது. இதில் மோட்டார் வாகன திருத்த சட்டம் 2019-ன் பிரிவு 50 முதல் 57 மற்றும் 93 ஆகியவை 3 ஆம் தரப்பு காப்பீடு மற்றும் மோட்டார் விபத்து உரிமைகோரல் தீர்ப்பாயம் தொடர்புடையவை பொறுத்தும் அறிவித்துள்ளது. மேலும் மோட்டார் வாகன சட்டத்தின் திருத்தப்பட்ட விதிகளின்படி, விபத்து நடந்த தேதியிலிருந்து 6 மாதங்களுக்குள் மனு தாக்கல் செய்யப்படவேண்டும். விபத்து 28.02.2022 ம் தேதி ஏற்பட்டது. மனுதாரர் 28.08.2022 அல்லது 30.09.2022 அன்று அல்லது அதற்கு முன் இழப்பீட்டு மனுவை தாக்கல் செய்திருக்கவேண்டும். ஏனெனில் மனு 10.10.2022 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. காலவரம்பிற்கு அப்பால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ecourt status-ல் 10.10.2022 ம்தேதி மனு தாக்கல் செய்துள்ளதாக காணப்படுகிறது. எனவே காலவரம்பினால் தடைசெய்யப்பட்ட மனுவை தாக்கல் செய்துள்ளார். திருத்தப்பட்ட மோட்டார் வாகன சட்டத்தின்படி மனுதாரர் விபத்து வாகனத்தின் ஓட்டுநர் மற்றும் விபத்தில் சம்மந்தப்பட்ட பிற வாகனங்களின் ஓட்டுநர் ஆகியோரை மோட்டார் வாகன சட்டத்தின் பிரிவு 166-ன் கீழ் முறையான தீர்ப்பிற்காக தரப்பினராக சேர்க்கப்படவேண்டும். மனுதாரர் விபத்து வாகன ஓட்டுநரை அவசியதரப்பினராக சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் மனு பாதிக்கப்பட்டுள்ளது. விபத்திற்கு 1 ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவுதான் காரணம் என்பது மறுக்கப்படுகிறது. மனுதாரரே அதனை நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். விபத்து நடந்த மறுநாள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்தை நேரில் பார்க்காத மணிவேல் என்பவர் புகார் அளித்துள்ளார். முதல் தகவல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள அலட்சியத்தின் பின்னணிக்கு நம்பகத்தன்மை அளிக்க முடியாது. விபத்துப் பதிவேட்டில், மனுதாரர் அதே வாகனத்தை ஓட்டிச் சென்றபோது சாலையைக் கடக்கும் வேளையில் விபத்து நிகழ்ந்ததாகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் தனது கவனக்குறைவால் விபத்தை வரவழைத்துக் கொண்டார். மனுதாரரின் இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையின்படி மனுதாரர் ஆய்வின்போது ஓட்டுநர் உரிமம் மற்றும் இருசக்கர வாகனத்தின் காப்பீட்டுப் பத்திரத்தின் நகலைச் சமர்ப்பிக்கவில்லை. அதனால் அவருக்கு

N VENKATESAN
Digitally signed by N VENKATESAN
Date: 2026.07.31 11:07:02 +0530

செக் ரிப்போர்ட் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, செல்லுபடியாகும் ஆவணங்கள் இல்லாததாலும், வாகனத்தை ஓட்டும் திறன் தெரியாததாலும், மனுதாரர் தனது சொந்த அலட்சியத்தால் விபத்தில் சிக்கினார். எனவே, இந்தச் சூழலில் ஏதேனும் இழப்பீடு வழங்கப்பட்டால், அந்த இழப்பீட்டுத் தொகையிலிருந்து குறைந்தபட்சம் 30% குறைக்கப்படவேண்டும். விபத்து சமயத்தில் 1ஆம் எதிர்மனுதாரர் வாகனம் 2 ஆம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்பது மறுக்கப்படுகிறது. எனவே இம்மனு இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும். மனுதாரரின் வயது, காயம், சிகிச்சை, தொழில், வருமானம், இழப்பு பற்றி கூறப்பட்டுள்ளவை மறுக்கப்படுகிறது. அவற்றை மனுதாரர் ஆவணங்கள் மூலம் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். கோரியுள்ள இழப்பீடு அதிகமானது. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. <u>மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் யாதெனில்</u>:-

1. விபத்து 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேக மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டதா?

2. மனுதாரர் இழப்பீடு பெற உரியவரா, உரியவராயின் இழப்பீடு யாரால் செலுத்தப்படவேண்டும்?

3. மனுதாரருக்கு இழப்பீட்டு தொகை எவ்வளவு?

4. மனுதாரர் தரப்பில், மனுதாரர் கிருஷ்ணன் ம.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.14 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் 2 ஆம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் முதுநிலை சட்ட மேலாளராக பணிபுரியும் அசோக்குமார் எ.ம.சா.1-ஆக விசாரிக்கப்பட்டு, எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.8 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவக்குழு வழங்கியுள்ள ஊனச்சான்றிதழ் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் எழுத்துபூர்வ வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் எழுத்துபூர்வ வாதுரை மற்றும் கூடுதல் எழுத்துபூர்வ வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

<u>5. பிரச்சனை 1-க்குரிய தீர்வு:-</u>

(1). அசல் மனு, எதிர் உரை ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் ஆகியவை கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1-ஆக விசாரிக்கப்பட்டுள்ள கிருஷ்ணன் தனது சாட்சியத்தில் கடந்த 28.02.2022 ம் தேதியன்று மாலை சுமார் 4.30 மணியளவில் மனுதாரர் TN15A1057 என்ற எண்கொண்ட இருசக்கர மோட்டார் சைக்கிள் வாகனத்தில் தனது சொந்த வேலையாக அரசூர்-பண்ருட்டி சாலைக்கு சென்று வேலை முடிந்து மீண்டும் வீட்டிற்கு வருவதற்காக சென்னை-திருச்சி மெயின் ரோட்டை கடப்பதற்காக அரசூர் பேருந்து நிறுத்தம்

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2026.07.31 11:07:07 +0530

அருகே நின்றபோது அச்சமயம் 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN11X0389 என்ற பதிவெண் கொண்ட டெம்போ டிராவலர் வேன் வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்ரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து மனுதாரர் ஓட்டிச்சென்றுக்கொண்டிருந்த இருசக்கர மோட்டார் சைக்கிள் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றும், விபத்தில் மனுதாரருக்கு வலது பக்க மார்பு, வலது கணுக்கால், இடது தொடை, இடுப்பு ஆகிய இடங்களில் அடியும் மற்றும் உடல் முழுவதும் பலத்த காயங்களும் ஏற்பட்டது என்றும், விபத்து ஏற்பட்டவுடன் மனுதாரர் விழுப்புரம், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்றும், விபத்திற்கு 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவும், அதிவேகமும், அஜாக்ரதையும்தான் காரணம் என்றும், எனவே எதிர்மனுதாரர்கள் தனக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் விபத்தை உறுதியூட்டும் வண்ணம் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை 1ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு அதன்மேல் புலன் விசாரணை அதிகாரியால் விசாரணை செய்யப்பட்டு 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு எதிராக இதச பிரிவுகள் 279,338-ன்படி ம.சா.ஆ.8 இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சாட்சியம் சம்பத்தகுந்ததாகவும், சந்தேகத்திற்கு அப்பாற்பட்டும் உள்ளதை இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது. இதனை மறுக்கும் விதத்திலும் மற்றும் முறியடிக்கும் விதத்திலும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித கண்ணுற்ற சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை.

(2). முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1-ஆக குறியிடப்பட்டுள்ளது. மேற்படி விபத்து குறித்து விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீது இ.த.ச.பிரிவுகள் 279,337-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ள விபரம் ம.சா.ஆ.1-ன் முன்னிலைக்கு தெரியவருகிறது. மேற்படியான ஆவணத்தில் விபத்து நடந்த தேதி 28.02.2022 என்றும், வழக்கு பதிவு செய்யப்பட்ட நாள் 01.03.2022 என்றும், விபத்து ஏற்படுத்தியது TN11X0389 என்ற பதிவெண் கொண்ட டெம்போ டிராவலர் வேன் வாகன ஓட்டுநர் என்றும் விபரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனம் 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பது ம.சா.ஆ.1,2,3,4,5,6,7 மற்றும் ம.சா.ஆ.8 ஆகிய ஆவணங்களை காணும்போது தெரியவருகிறது. மேலும், மேற்கண்ட வாகனத்தின் உரிமையாளர் 1ஆம் எதிர்மனுதாரர் இல்லை என்றோ அந்த வாகனம் விபத்து சமயத்தில் 2ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை என்றோ 2ஆம் எதிர்மனுதாரரால் ம.சா.1-ன் குறுக்கு விசாரணையின்போது மறுத்துரைக்கப்படவில்லை. மனுதாரர் முதல் தகவல் அறிக்கை, காப்பீட்டு சான்றிதழ், ஓட்டுநர் உரிமம், மோட்டார் வாகன ஆய்வறிக்கை, பதிவுச்சான்றிதழ், அனுமதி சான்றிதழ், தகுதிச்சான்றிதழ், இறுதி அறிக்கை ஆகியவற்றை பரிசீலனை செய்ததில் விபத்து ஏற்படுத்தியதாக கூறப்பட்டுள்ள வேன் வாகனம் 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2026.07.31 11:07:13 +0530

என்பதும், விபத்து சமயத்தில் மேற்கண்ட வாகனம் 2 ஆம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு வாகன காப்பீடு நடைமுறையில் இருந்து வந்துள்ளது என்பது ம.சா.ஆ.4 காப்பீட்டுச்சான்றிதழிலிருந்து தெரியவருகிறது என்பதும், 1 ஆம் எதிர்மனுதாரார் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் ஆய்வின்போது காப்பீட்டு சான்றிதழ் ஆஜர் செய்யப்படவில்லை என்றும், அதனால் வாகனம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது என்பதும் ம.சா.ஆ.2 மோட்டார் வாகன ஆய்வறிக்கையிலிருந்து தெரியவருகிறது. விபத்து மேற்கண்ட வாகனத்தின் எவ்வித இயந்திரக் கோளாறினாலும் ஏற்படவில்லை என்பதும், மேற்கண்ட வாகனத்தின் ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் உரிய ஓட்டுநர் உரிமம் இருந்துள்ளது என்பதும் தெளிவாக தெரியவருகிறது. எனவே மனுதாரர் தரப்பு சான்றாவணங்களின் வாயிலாகவும் மேற்படி விபத்தானது 1 ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அலட்சியம், கவனக்குறைவு மற்றும் அஜாக்ரதையால்தான் ஏற்பட்டுள்ளது என்ற விவரம் மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

(3). மனுதாரர் தாக்கல் செய்த ம.சா.ஆ.4 பாலிசி காப்பியில் தன்மீது மோதிய வாகனத்தின் மாடல் TVS-50 XL என்று உள்ளது என்றும், அதேபோல் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையில் காலம் 11-ல் பாலிசி காப்பி தாக்கல் செய்யப்படவில்லை என சொல்லப்பட்டுள்ளது என்றும், உண்மையில் 2 ஆம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் தன் மீது மோதிய வாகனத்திற்கு காப்பீடு செய்யப்படவில்லை என்றும், இவ்விபத்திற்கு 2 ஆம் எதிர்மனுதாரர் எவ்விதத்திலும் பொறுப்பல்ல என்றும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பாலிசி முறையானது அல்ல என்றும், அது 2 ஆம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தால் சட்டப்படி வழங்கப்படவில்லை என்றும் 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. தனது கவனக்குறைவு விபத்திற்கு காரணம் அல்ல என்றும், 1 ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்றும், எனவே மனுவில் கோரியுள்ளவாறு மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கது என்றும் மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

மனுதாரர் தரப்பு மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிய விசாரணையின் வாயிலாகவும், சான்றாவணங்கள் வாயிலாகவும் மற்றும் குறுக்கு விசாரணையின் வாயிலாகவும் முதல் தகவல் அறிக்கை அம்சங்களையொட்டி சாட்சியம் அளித்துள்ள மனுதாரர்/ம.சா.1, விபத்து 1 ஆம் எதிர்மனுதார் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்ரதையால்தான் ஏற்பட்டது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. முதல் தகவல் அறிக்கை அம்சங்களையொட்டி சாட்சியம் அளித்துள்ள மனுதாரர்/ம.சா.1, விபத்து 1 ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்ரதையால்தான் ஏற்பட்டது என்று கூறியுள்ளார். மேற்கண்ட சூழ்நிலையில், விபத்து வேறு எவ்வாறு நடந்தது என்பது குறித்து அறிந்துகொள்ளும் விதமாக 1 ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரோ அல்லது 3 ஆம் தரப்பு தனிநபர் சாட்சிகள் எவருமோ 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்

N VENKATESAN
Digitally signed by N VENKATESAN
Date: 2026.07.31 11:07:20 +0530

முன்னிலைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதா என்பதற்கும் எந்த ஆதாரமும் இல்லை. விபத்திற்கு காரணமான வாகனத்தின் ஓட்டுநரை எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்காத நிலையில், அந்த வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்று அனுமானம் கொள்ளலாம் என்பதனை

K.K.Jain & 7 others /vs/ Masroor Anwar & others 1990 ACJ 299

வழக்கில் மாண்புமிகு மத்தியபிரதேச உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. முதல் தகவல் அறிக்கை, இறுதி அறிக்கையும் 1 ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீதுதான் பதிவு செய்யப்பட்டுளள்து. எனவே மேற்சொன்ன காரணங்களால் மேற்கண்ட சூழ்நிலையில் 1 ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால்தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இப்பிரச்சனைக்கு அவ்வாறே தீர்வு காணப்படுகிறது.

6. பிரச்சனை 2-க்குரிய தீர்வு:-

(1). தீர்வுக்குரிய பிரச்சனை 1 மனுதாரருக்கு ஆதரவாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த மனு உரிய கால அவகாசத்திற்குள் தாக்கல் செய்யப்படவில்லை என்று எதிர்மனுதாரர் முன்வைத்துள்ள எதிர்வாதத்தினை பார்க்கையில் இம்மனுவாகனது மாண்புமிகு சிறப்பு மாவட்ட நீதிமன்றம், விழுப்புரத்தில் தாக்கல் செய்யப்பட்டு இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கானது காலவரையறை தோஷத்தால் பாதிக்கப்பட்டிருந்தால் மாண்புமிகு சிறப்பு மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் இவ்வழக்கை கோப்பிற்கே எடுத்திருக்க மாட்டார்கள். இவ்வழக்கு மாண்புமிகு சிறப்பு மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்ற விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் இவ்வழக்கு உரிய கால அவகாசத்திற்குள் தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டதாகவோ அல்லது காலதாமதத்தினை மன்னித்து கோப்பிற்கு எடுக்கப்பட்டதாகவோதான் கருத வேண்டியுள்ளது. எனவே எதிர்மனுதாரரின் காலவரையறை தோஷத்தால் இந்த மனு பாதிக்கப்பட்டுள்ளது என்ற கூற்றை உறுதியூட்ட வேண்டிய சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை முன்னிறுத்த எதிர்மனுதாரர்கள் தவறியுள்ளனர்.

(2). பிரச்சனை-1க்கு 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவே விபத்திற்கு காரணம் என்று தீர்வு காணப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் இழப்பீடு பெற அருகதையுடையவர். மேற்படி 1ஆம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் காப்பீட்டாளர் 2ஆம் எதிர்மனுதாரர் என்பதால் மனுதாரருக்கான இழப்பீட்டை 1,2 எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவோ, கூட்டாகவோ வழங்க வேண்டுமென்று மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. விபத்து சமயத்தில் 1ஆம் எதிர்மனுதாரர் வாகனம் 2ஆம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு எதுவும்

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2026.07.31 11:07:26 +0530

செய்யப்பட்டிருக்கவில்லை என்றும், எனவே மனுதாரருக்கு 2ஆம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும், இழப்பீடு 1ஆம் எதிர்மனுதாரரே கொடுக்க கடமைப்பட்டவர் என்றும் 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

(3). 2 ஆம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் முதுநிலை சட்ட மேலாளராக பணிபுரியும் அசோக்குமார் எ.ம.சா.1-ஆக விசாரிக்கப்பட்டு, எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.8 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அவர் தனது சாட்சியத்தில் கடந்த 28.02.2022 அன்று மாலை சுமார் 04.30 மணியளவில், TN-15-A-1057 என்ற பதிவு எண் கொண்ட TVS Sport இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றபோது, TN-11-X-0389 என்ற பதிவு எண் கொண்ட டெம்போ டிராவலர் (Tempo Traveller) வேன் ஓட்டுநரால் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டப்பட்டு மோதியதால் ஏற்பட்ட காயங்களுக்காக மனுதாரர் மேற்கூறிய முதன்மை மனுவைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், தனது தரப்பு வாதத்தை நிரூபிப்பதற்காக, மனுதாரர் பின்வரும் ஆவணங்களான திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தின் குற்ற எண் 149/2022-க்கான முதல் தகவல் அறிக்கை (F.I.R.); TN-11-X-0389 பதிவு எண் கொண்ட டெம்போ டிராவலர் வேனுக்கான மோட்டார் வாகன ஆய்வாளர் (M.V.I) அறிக்கை; அதே வாகனத்திற்கான பதிவுச் சான்றிதழ் (R.C. Book); 14.01.2022 முதல் 13.01.2023 வரையிலான காலத்திற்கான காப்பீட்டுப் பத்திர நகல் (டெம்போ டிராவலர் வாகனத்திற்கானதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது); டெம்போ டிராவலர் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம்; அந்த வாகனத்திற்கான அனுமதிச் சீட்டு (Permit) மற்றும் தகுதிச் சான்றிதழ் (Fitness Certificate); குற்ற எண் 149/2022-க்கான இறுதி அறிக்கை; மனுதாரரின் விபத்து பதிவு (Accident Register); மற்றும் ஸ்கேன் அறிக்கை மற்றும் மருத்துவச் செலவு ரசீதுகளுடன் கூடிய மனுதாரரின் மருத்துவமனை விடுவிப்புச் சுருக்கம் (Discharge Summary) தாக்கல் செய்துள்ளார் என்றும், புதிதாகத் திருத்தப்பட்ட மோட்டார் வாகனச் சட்டத்தின்படி, காலவரையறைக்கு அப்பால் இம் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகக் கூறி, இதனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற வாதத்தை தங்கள் நிறுவனம் ஆரம்பத்திலேயே முன்வைத்துள்ளது என்றும், மேலும், மனுதாரர் சமர்ப்பித்த காப்பீட்டு ஆவணத்தையும் (Policy) மோட்டார் வாகன ஆய்வாளர் (M.V.I) அறிக்கையையும் தங்கள் நிறுவனம் ஆய்வு செய்து சரிபார்த்தபோது, விபத்து நடந்த சமயத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் தங்கள் நிறுவனத்திடம் காப்பீடு செய்யப்படவில்லை என்பது தெரியவந்தது என்றும், TN-11-X-0389 என்ற பதிவு எண் கொண்ட 'டெம்போ டிராவலர்' (Tempo Traveller) வேன் விபத்தை ஏற்படுத்திய நிலையில், 1ஆம் எதிர்வாதியான ஏழுமலை (Ezhumalai) தனது வாகனத்தை 'TVS / XL / 50' என்றும், அது ஒரு இருசக்கர வாகனம் என்றும் குறிப்பிட்டு, அதற்கான காப்பீட்டுத் தொகையாக (premium) ரூ.687/- செலுத்தி, இருசக்கர வாகனத்திற்கான காப்பீட்டுத் திட்டத்தைப் (package policy) பெற்றுள்ளார் என்பதை தங்கள் நிறுவனம் அறிந்துகொண்டது என்றும், 1ம் எதிர்மனுதாரர் இணையவழி விண்ணப்பப் படிவத்தின்

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2026.07.31 11:07:36 +0530

மூலம் காப்பீட்டிற்கு விண்ணப்பித்தபோது, வாகனத்தின் வகையை 'இருசக்கர வாகனம்' என்று குறிப்பிட்டிருந்தார் என்றும், அந்த விண்ணப்பப் படிவம் இத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதில், தனது வாகனம் இருசக்கர வாகனம் என்பது போல 'ஆம்' (Yes) என்ற கட்டத்தில் அவர் குறியிட்டிருந்தார் என்றும், எனவே, விபத்தின்போது அது நான்கு சக்கர வாகனமான 'டெம்போ டிராவலர்' வாகனம் என்ற உண்மையை மறைத்து, இருசக்கர வாகனத்திற்கான காப்பீட்டுத் தொகையை மட்டுமே செலுத்தி முதல் எதிர்வாதி காப்பீட்டைப் பெற்றுள்ளார் என்றும், முறையான தீர்ப்பிற்காக, தங்கள் தரப்பு ஆவணமாக அந்த விண்ணப்பப் படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்றும், அது எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும், TN-11-X-0389 என்ற பதிவு எண் கொண்ட நான்கு சக்கர வாகனம் தங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்படவில்லை என்பதை நன்கு அறிந்திருந்தும், நீதிமன்ற அழைப்பாணை (summons) வழங்கப்பட்ட பிறகும் 1ம் எதிர்மனுதாரர் இந்தத் தீர்ப்பாயத்தின் முன் ஆஜராகவில்லை என்றும், மேலும், விவரங்களைத் தெளிவுபடுத்தும் நோக்கில் தங்கள் நிறுவனத்தின் வழக்கறிஞர் 04.01.2025 அன்று 1ம் எதிர்மனுதாரருக்கு பதிவு அஞ்சல் மூலம் அறிவிப்பை அனுப்பினார் என்றும், ஆனால், அவர் அந்த அறிவிப்பைப் பெற்றுக்கொள்ளாமல் தவிர்த்துவிட்டார் என்றும், முறையான தீர்ப்பிற்காக தங்கள் தரப்பு ஆவணங்களாகப் பயன்படுத்த, பதிவு அஞ்சல் அறிவிப்பின் அலுவலக நகல், அஞ்சல் ரசீது மற்றும் திரும்பப் பெறப்பட்ட அஞ்சல் உறை ஆகியவை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன என்றும், அவைகள் எ.ம.சா.ஆ 2, எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும், இது போன்ற காப்பீட்டுத் திட்ட வகைப்பாடு தொடர்பான விவகாரங்களில், வாகனத்தின் வகைக்கு ஏற்ற சரியான காப்பீட்டுத் தொகையைச் செலுத்தாமல் பல நபர்கள் தங்கள் நிறுவனத்தை ஏமாற்றியுள்ளனர் என்றும், எனவே, தங்கள் நிறுவனத்தின் மேலாளர் மூலம், சம்பந்தப்பட்ட நபர்களின் பட்டியலைச் சமர்ப்பித்து, 06.12.2023 அன்று சென்னை, திருவல்லிக்கேணியில் உள்ள 'தவுசண்ட் லைட்ஸ்' (Thousand Lights) காவல் நிலைய ஆய்வாளரிடம் (S.H.O.) புகார் அளிக்கப்பட்டது என்றும், காவல் துறையினரும் 06.12.2023 அன்று இது தொடர்பாக வழக்கு (Crime) பதிவு செய்தனர் என்றும், அந்த முதல் தகவல் அறிக்கை எ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், விசாரணையில் உள்ள எண்.254/2023-ஐ தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதாகவும், 'ஃபிக் அஹமது எதிர் ஐசிஐசிஐ லோம்பார்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்' (Safiq Ahamad Vs ICICI Lombard General Insurance Company Limited) வழக்கின் பல்வேறு சிறப்பு விடுப்பு மனுக்களில் (SLP), நீதிமன்றத்திற்கு உதவும் வழக்கறிஞரை (Amicus Curiae) நியமித்தும், சிறப்புப் புலனாய்வுக் குழுவை (SIT) அமைத்தும் உச்ச நீதிமன்றம் 12.09.2023 மற்றும் 16.04.2025 தேதிகளில் உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது. அது எ.ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளத என்பது தங்கள் அறிவுக்கு உட்பட்டதே என்றும், இழப்பீடு பெறத் தகுதியற்ற சூழல்களான 'போலி பாலிசி' (Fake Policy) மற்றும் 'மோசடி' (Fraudulent Context) போன்ற காரணங்களின் அடிப்படையில் பல

N VENKATESAN
Digitally signed by N VENKATESAN
Date: 2026.07.31 11:07:43 +0530

கோரிக்கைகள் தீர்ப்பாயத்தில் நிலுவையில் உள்ளன என்றும், இத்தகைய சூழல்களில் சம்பந்தப்பட்ட வாகனத்தின் உரிமையாளரே இழப்பீடு வழங்கப் பொறுப்பாவார் என்றும், எனவே, முறையான நீதித்துறை விசாரணைக்காக, மேற்கூறிய முதல் தகவல் அறிக்கை (FIR), தங்கள் நிறுவனத்தால் பதிவு செய்யப்பட்ட வழக்கு விவரங்கள் மற்றும் 'ஃபிக் அஹமது எதிர் ஐசிஐசிஐ லோம்பார்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்' வழக்கின் மேல்முறையீடு எண்.1110/2017 மற்றும் அதனுடன் தொடர்புடைய இடைக்கால மனுக்கள் (I.A. Nos. 67360/18, 77754/18, 3912/2021, 147434/2021, 1032/2025) ஆகியவற்றின் மீதான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு மற்றும் உத்தரவுகள் ஆகியவற்றை தங்கள் தரப்பு ஆவணங்களாகப் பரிசீலிக்கும்படியும், மேலும், மேற்கூறிய விபத்து வழக்கில் சம்பந்தப்பட்ட TN-11-X-0389 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்திற்கான பட்டியலை தங்கள் நிறுவனம் தாக்கல் செய்துள்ளது என்றும், அவ்வாகனம் "கருப்புப் பட்டியலில்" (Black List) இடம்பெற்றுள்ளது என்பதை இது நிரூபிக்கும் என்றும், எனவே, விபத்து நடந்த நேரத்தில் அவ்வாகனத்திற்கு தங்கள் நிறுவனத்தில் காப்பீடு எதுவும் செய்யப்படவில்லை என்றும், ஆகவே, இழப்பீடு வழங்குவதற்கான பொறுப்பிலிருந்து தங்கள் நிறுவனம் விடுவிக்கப்பட வேண்டும் என்றும், முறையான தீர்ப்பிற்கு உதவும் வகையில், தங்கள் தரப்பு ஆவணங்களாகக் கருதப்பட வேண்டிய, வட்டாரப் போக்குவரத்து அலுவலரால் (RTO) வழங்கப்பட்ட கருப்புப் பட்டியல் விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன என்றும், மேலும், வாகன வகையைத் தவறாகக் குறிப்பிட்டு குறைவான காப்பீட்டுக் கட்டணத்தைச் செலுத்தியிருந்த கே.எழுமலை (1வது எதிர்மனுதாரர்) குறித்து விளக்கி, அவருக்கு தங்கள் நிறுவனம் 21.10.2022 அன்று பதிவு அஞ்சல் மூலம் கடிதம் அனுப்பியிருந்ததையும், ஆனால் அவர் அந்தக் கடிதத்திற்குப் பதிலளிக்கவில்லை என்றும், எனவே, 1 வது எதிர்மனுதாரரான கே.எழுமலை பெயரில் வழங்கப்பட்ட காப்பீட்டுத் திட்டம் ரத்து செய்யப்பட்டது குறித்த விவரங்களைத் தெரிவித்து, தாம்பரம் வட்டாரப் போக்குவரத்து அலுவலருக்கு தங்கள் நிறுவனம் 30.12.2022 அன்று பதிவு அஞ்சல் அனுப்பியது என்றும், முறையான தீர்ப்பிற்கு உதவும் வகையில், தங்கள் தரப்பு ஆவணங்களாகக் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன என்றும், இழப்பீடு வழங்குவதற்கான பொறுப்பிலிருந்து தங்கள் நிறுவனத்தை விடுவிக்கவேண்டும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(4). பிரச்சனை-1க்கு 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவே விபத்திற்கு காரணம் என்று தீர்வு காணப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் இழப்பீடு பெற அருகதையுடையவர். மேற்படி 1ஆம் எதிர்மனுதாரர் TN11X0389 என்ற பதிவெண் கொண்ட டெம்போ டிராவலர் வேன் தனக்கு சொந்தமானது என்ற விவரத்தை எதிருரையின் வாயிலாகவும், சாட்சியங்களின் வாயிலாகவும் மற்றும் ஆவணங்களின் வாயிலாகவும் ஒப்புக்கொண்டுள்ளார். அதனை பொறுத்து உபய தரப்பினர்களுக்கும் எவ்வித சர்ச்சையும் இல்லை. ஆக மனுதாரர் இழப்பீடு பெற உரிமையுடையவர் என்ற நிலையில் மேற்படி யார் செலுத்தி வைக்க கடமைப்பட்டவர் என்பதே தீர்வு காணப்படவேண்டியதாக உள்ளது. மேற்படி TN11X0389 என்ற எண்கொண்ட வேன் கடந்த

N VENKATESAN
Digitally signed by N VENKATESAN
Date: 2026.07.31 11:07:50 +0530

14.01.2022 காலம் முதல் 13.01.2023 காலம் வரை பாலிசி, Registration No.TN11X0389, Make/Model & Variant-Tvs/XL/50, Chassis No.47000077/DP22954-ன்படி ஏழுமலை என்பவர் பெயரில் பதிவாகியுள்ள விவரம் ம.சா.ஆ.4-ன்படி தெளிவாக தெரியவருகிறது. அதனை மற்ற உபய தரப்பினர்களும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். TN11X0389 என்ற எண்கொண்ட வேன் வாகனத்தின் பாலிசி எண் ம.சா.ஆ.4 காப்பீட்டுச்சான்றிதழில் குறிப்பிடப்படவில்லை. TN-11-X-0389 என்ற பதிவு எண் கொண்ட 'டெம்போ டிராவலர்' (Tempo Traveller) வேன் விபத்தை ஏற்படுத்திய நிலையில், 1 ஆம் எதிர்வாதியான ஏழுமலை தனது வாகனத்தை 'TVS / XL / 50' என்றும், அது ஒரு இருசக்கர வாகனம் என்று குறிப்பிட்டு, அதற்கான காப்பீட்டுத் தொகையாக (premium) ரூ.687/- செலுத்தி, இருசக்கர வாகனத்திற்கான காப்பீட்டுத் திட்டத்தைப் (package policy) பெற்றுள்ளார் என்பது தெரியவருகிறது. அதனை மற்ற உபய தரப்பினர்களும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். இவ்வழக்கில் விபத்தானது நடந்தது 28.02.2022 தேதியாகும். ஆக பாலிசி மேற்படி 1 ஆம் எதிர்மனுதாரர் பெயரில் விபத்து நடந்த 28.02.2022 தேதியில் இருந்தது என மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.4 ஆவணத்தையும், 1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் அதே பாலிசியை எ.ம.சா.ஆ.1-ஆகவும் சமூகம் நீதிமன்றத்தில் குறியீடு செய்துள்ளார்கள். ஆக மனுதாரரும் 1 ஆம் எதிர்மனுதாரர் ஏழுமலையும், ம.சா.ஆ.4 மற்றும் எ.ம.சா.ஆ.1 ஆவணங்களின்படி விபத்து காலமான 28.02.2022-ல் ஏழுமலை பெயரில் விபத்து வேன் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதேயாகும். அது உண்மையா என்று ஆய்வு செய்த வகையில் பாலிசி காப்பியில் மனுதாரர் தரப்பில் ஆன்லைனில் உரிமையாளர் பெயர் ஏழுமலை என்பவர் பெயரில் TN-11-X-0389 என்ற வாகனத்திற்கு காப்பீடு பெறப்பட்டுள்ளது. ஆனால் அது இரு சக்கர வாகனத்திற்கு பெறப்பட்டதாகும். ஆனால் விபத்தில் சம்மந்தப்பட்டது நான்கு சக்கர வாகனம் ஆகும். ஆன்லைனில் காப்பீடு பெறும் போது உரிமையாளர் பெயர், வாகன எண் மற்றும் எந்த வகையான வாகனம் என அந்த வாகனத்தின் உரிமையாளர் குறிப்பிடுகிறாறோ அது போன்றே ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்படும். ஆனால் நான்கு சக்கர வாகனத்திற்கு இரு சக்கர வாகனம் என்பது போல காண்பித்து பாலிசி தொகையை குறைவாக கட்டி தவறு செய்துள்ளார்கள். அவ்வாறு ஆன்லைனில் ஒரு வேளை தவறுதலாக உரிமையாளர் செய்திருந்தாலும் யார் பொறுப்பாளர் என்றால் நிறுவனம் பொறுப்பல்ல உரிமையாளர் பொறுப்பாகும். இந்த வழக்கை பொறுத்த வரை எஞ்சின் எண், சேசிஸ் எண் சரியாக குறிப்பிடபட்டுள்ளதா என்றால் முழுமையாகவும் முறையாகவும் குறிப்பிடப்படவில்லை. இரு சக்கர வாகனத்திற்கு எஞ்சின் எண், சேசிஸ் எண் உள்ளது. பாலிசியில் உள்ள குறைபாட்டுக்கும் மனுதாரருக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. அவருக்கு ஏற்பட்டுள்ள விபத்து காயத்திற்கு நஷ்ட ஈடு யார் பொறுப்பாளர்கள் என்று பார்த்தால் 1ம் எதிர்மனுதாரரால் மிக குறைந்த பிரிமியம் இருசக்கர வாகனத்திற்கு செலுத்த வேண்டிய தொகையை மட்டும்தான் செலுத்தியுள்ளார். நான்கு சக்கர வாகனம் என்று கணினி வழியில் உண்மையை கூறாமல் இருசக்கர வாகனம் என்று குறிப்பிட்டு சட்ட புறம்பான அனுகூலத்தை 1ம் எதிர்மனுதாரர் அடைந்துள்ளார். 2ம் எதிர்மனுதாரர் உரிய ஆய்வு மேற்கொண்டு பாலிசி வழங்காமல்

கவனக்குறைவு பாலிசி வழங்கிய விதத்தில் 2ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவும் தெரியவருகிறது. எனவே 1,2 எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு செலுத்த வேண்டிய நட்ட ஈட்டில் சரிபாதியாக பொறுப்பேற்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

விபத்து சமயத்தில் 1ஆம் எதிர்மனுதாரர் வாகனம் 2ஆம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை என்றும், எனவே மனுதாரருக்கு 2ஆம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும், இழப்பீடு 1ஆம் எதிர்மனுதாரரே கொடுக்க கடமைப்பட்டவர் என்றும், 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தை பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும், 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டு மேற்கண்ட வாதத்திற்கு ஆதரவாக CMA No.190/2023, dated- 18.04.2023, The Special Sub Judge, Madurai MCOP.No.8542022, Dated-26.03.2026, MCOP Claims Tribunal, Coimbatore MCOP.No.381/2023, Dated-02.07.2026, வழக்குகளில் மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கியுள்ள தீர்ப்புகள் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கோள் காட்டப்பட்டன.

மேற்கண்ட பொருண்மைகளையும் மேற்கண்ட எ.ம.சா.1-ன் சாட்சியம், மோட்டார் வாகன ஆய்வறிக்கை, காப்பீட்டு சான்றிதழ் உள்ளிட்ட சான்றாவணங்களையும் பரிசீலணை செய்ததில் 1ம் எதிர்மனுதாரர் விபத்து சமயத்தில் தனது வாகனத்திற்கு முறையான காப்பீடு செலுத்தாமல் பாலிசி விதிகளை மீறி வாகனத்தை ஓட்டியுள்ளார் என்பதும், 1ம் எதிர்மனுதாரரின் இந்த செயல் பாலிசி விதியை மீறியதாக உள்ளது என்பதும் தெளிவாக தெரியவருகிறது.

மேலும் மேற்படி விபத்திற்குள்ளாக்கப்பட்ட வேன் வாகனத்தின் காப்பீட்டின் நிபந்தனைகளின்படி மனுதாரர் எந்தவித நஷ்டஈடும் கோரமுடியாது என 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டபோதிலும் மேற்படி 1ம் எதிர்மனுதாரர் வேன் வாகன ஓட்டுநரின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதால் மனுதாரர் அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு நஷ்டஈடு கோர உரிமையுடையவர் என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

2024(1) TN MAC 401

மேற்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி விபத்து சமயத்தில் பாலிசி நிபந்தனைகள் மீறப்பட்டாலும் 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இழப்பீடு அளிக்க வேண்டும் என்றும், இழப்பீடு 2ம் எதிர்மனுதாரர் அளித்துவிட்டு பின்னிட்டு 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூல் செய்துகொள்ள வேண்டும் என்றும் பகரப்பட்டுள்ளது.

எனவே 1ம் எதிர்மனுதாரரின் செய்கை பாலிசி விதிகளுக்கு முரணானதாக இருந்தாலும், மனுதாரருக்கான இழப்பீட்டை 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்திவிட்டு, அதனை 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூல் செய்துகொள்ள வேண்டும் என மேற்படி தீர்முடிவில் பகரப்பட்டுள்ளது. மேற்படியான தீர்முடிவுகள் இவ்வழக்கிற்கும் பொருந்துவதாக உள்ளது. எனவே

N VENKATESAN
Digitally signed by N VENKATESAN
Date: 2026.07.31 11:08:01 +0530

இம்மனுதாரருக்கான 50% இழப்பீட்டை 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்திவிட்டு பின்னிட்டு அதனை 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூல் செய்துகொள்ளவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

எனவே 1ம் எதிர்மனுதாரரின் வேன் வாகனம் 2ம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயம் வலி, வேதனை மற்றும் சேதத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் 50% தொகையை செலுத்திவிட்டு பின்னிட்டு 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூல் செய்து கொள்ளவேண்டும் என பிரச்சனை 2 க்கு தீர்வு காணப்படுகிறது.

7. பிரச்சனை 3-க்குரிய தீர்வு:-

(1). மனுதாரருக்கு அடிப்பட்டவுடன் விழுப்புரம், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 28.02.2022 தேதி முதல் 15.03.2022 தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை மேற்கொண்டுள்ளார் என்பதும், சிகிச்சைக்கு சென்றபோது மனுதாரருக்கு right clavicle fracture ஏற்பட்டுள்ளது என்பதும், மனுதாரருக்கு விபத்தில் ஏற்பட்டுள்ள காயங்கள் கொடுங்காயங்கள் என சான்றளிக்கப்பட்டுள்ளது என்பதும் ம.சா.ஆ.9 விபத்து பதிவேட்டிலிருந்து தெரியவருகிறது. மேலும் மனுதாரரருக்கு left closed proximal fracture shaft of femur ஏற்பட்டுள்ளது என்பதும், மனுதாரருக்கு விபத்தில் ஏற்பட்டுள்ள எலும்பு முறிவிற்கு IMIL nailing of femur அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்பதும் ம.சா.ஆ.10 விடுவிப்புச்சான்றிதழிலிருந்து தெரியவருகிறது.

(2). தி ப்ரான்ச் மேனேஜர், டாடா ஏஜஜி ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடெட் எதிர் பிரபு மற்றும் ஒருவர் (C.M.A.No.2380-15-2016(1) TN MAC 609) வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை பின்பற்றி இந்நீதிமன்ற வேண்டுகோளின் பேரில் விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் குழு மனுதாரரை பரிசோதித்து நீ.ம.சா.ஆ.1 ஊனச்சான்றிதழை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளது. அந்த ஊனச்சான்றிதழில் மனுதாரரை பரிசோதித்ததில், மனுதாரருக்கு விபத்தில் ஏற்பட்ட left lower limb femur fracture காயங்களின் விளைவாக மொத்தம் 15% நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அதன் அடிப்படையில் மனுதாரருக்கு 15% நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது என இத்தீர்ப்பாயம் தீர்மானித்து கீழ்கண்டவாறு இழப்பீடு கணக்கிடப்படுகிறது.

8. ஊனத்திற்கான இழப்பீடு :-

இந்நிலையில் விபத்து சமயத்தில் மனுதாரரின் வயது 25 என்று மனுவில் கூறியுள்ள நிலையில், மனுதாரரின் ஆதார் அட்டையில் மனுதாரரின் பிறந்த தேதி 03.09.1996 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மனுதாரருக்கு விபத்து சமயத்தில் பூர்த்தியடைந்த வயது 26 என்று தீர்மானிக்கப்படுகிறது. தற்போதையை வாழ்க்கை செலவின அடிப்படையில் நேஷ்னல் இன்சுரன்ஸ் கம்பெனி லிமிடெட் எதிர் ஜி.ரமேஷ் மற்றும் ஒருவர் (2013 (2) TN MAC 583) வழக்கில்

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் நிரந்தர ஊனத்தை பொறுத்தும், வருமானத்தை பொறுத்தும் இழப்பீட்டுத் தொகை கருத்தில்கொள்ளவேண்டும் என்று தீர்ப்பளித்துள்ளது. மேலும் மனுதாரருக்கு 28.02.2022 தேதியில் ஏற்பட்ட left lower limb femur fracture காயங்களினால் மனுதாரருக்கு 15% நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளதால் மனுதாரரின் காயம் மற்றும் ஊனம் வயது ஆகியவற்றையும் அப்போதைய பணமதிப்பு ஆகியவற்றையும் கணக்கில்கொண்டு ஊனத்திற்கான இழப்பீட்டுத் தொகையை 1 சதவீதத்திற்கு ரூ.10,000/-என மாண்புமிகு உயர்நீதிமன்றம், சென்னை CMA.No.13/2025 dated 10.01.2025-ல் மாண்புமிகு நீதியரசர் எம்.தண்டபாணி அவர்கள் வழங்கிய தீர்ப்பின்படி சொல்லப்பட்டுள்ளது. எனவே நீ.ம.சா.1-ன்படி மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள 15% நிரந்தர ஊனத்திற்கு ரூ.10,000/- வழங்குவது சரியானதாக இருக்கும் என இந்நீதிமன்றம் இவ்வழக்கினை பொறுத்து தீர்மானித்து (15x10,000) = ரூ.1,50,000/- மனுதாரருக்கு ஊனத்திற்காக கிடைக்கதக்கது என்று தீர்மானிக்கப்படுகிறது.

9. மனவலி மற்றும் வேதனைக்காக :-

மனுதாரருக்கு விபத்தில் இடது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு 16 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துள்ளார். மேலும் மனுதாரருக்கு 15% நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது. மேலும் மனுதாரருக்கு 1 அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட மேற்படி காயங்களுக்காக அதிகபடியான மனவலியும், வேதனையும் ஏற்பட்டுள்ளதால் காயத்தின் தன்மையை கருத்தில்கொண்டு ரூ.50,000/- மனவலி மற்றும் வேதனைக்காக கிடைக்கதக்கது என்று தீர்மானிக்கப்படுகிறது.

10. வருமான இழப்பு :-

விபத்திற்கு முன்பு மனுதாரர் டெய்லர் வேலை செய்து மாதம் ரூ.20,000/- வரை சம்பாதித்து வந்ததாகவும், விபத்திற்கு பின்பு முன்பு போல் மேற்படி டெய்லர் வேலையை செய்ய முடியவில்லை என்றும் ம.சா.ஆ.1-ஆல் கூறப்பட்டுள்ளது. எனினும், வருமானம் குறித்து ஆதாரங்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர் டெய்லர் வேலை செய்து வந்தார் என்பதற்கான சான்றாவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே முன்தீர்ப்புகள் நெறிப்படியும், மனுதாரரின் வயதை கணக்கில்கொண்டும் 2022-ல் மனுதாரரின் மாத வருமானம் ரூ.10,000/- என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே விபத்தின்போது ஏற்பட் காயங்களினால் மனுதாரர் குறைந்த பட்சம் 3 மாதமாவது வேலைக்கு செல்லாமல் தொடர் சிகிச்சையில் இருந்திருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் என்பதால் வருமான இழப்பிற்காக ரூ.30,000 (3x10,000) கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

11. ஊட்டச்சத்து :-

மனுதாரர் சிகிச்சையிலிருந்தபோதும், சிகிச்சைக்காக பின்னிட்டு விபத்து காயங்களை ஆற்றுவதற்காக அதிகப்படியான ஊட்டச்சத்துள்ள உணவுகளை எடுத்துக்கொண்டுள்ள

N VENKATESAN

Digitally signed by N VENKATESAN
Date: 2026.07.31 11:08:13 +0530

சூழ்நிலைக்கு ஆளாகியுள்ளார். அந்த வகையில் அவர் ஊட்டச்சத்துணவு எடுத்துக்கொண்ட வகையில் அவருக்கு ஊட்டச்சத்துணவிற்காக ரூ.25,000/- இழப்பீடாக வழங்கி உத்தரவிடப்படுகிறது.

12.ஆடை சேத மதிப்பு :-

மனுதாரருக்கு விபத்தின்போது அணிந்திருந்த ஆடை சேதத்திற்காக ரூ.1,000/- இழப்பீடாக வழங்கி உத்தரவிடப்படுகிறது.

13. போக்குவரத்து :-

விபத்து ஏற்பட்டவுடன் மனுதாரர் போக்குவரத்து மூலம் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டார் என்பதற்கான உறுதியூட்டப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருப்பினும் விபத்து ஏற்பட்ட இடம், சிகிச்சை மேற்கொண்ட மருத்துவமனை ஆகியவற்றை கருத்தில்கொண்டு போக்குவரத்து ரூ.10,000/- கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

14. மருத்துவ பில்கள் :-

மனுதாரர் விழுப்புரம், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்ட வகையில் ரூ.1,500/- செலவானதாக மருத்துவ செலவு ரசீதுகள் மனுதாரரால் ம.சா.ஆ.14 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மருத்துவ பில்களை நிராகரிக்கும் வண்ணம் எதிர்மனுதாரர்களால் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே மருத்துவ செலவு பில்லுக்கான தொகையாக ரூ.1,500/- மட்டும் மனுதாரர் பெற உரியவர் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

15. உதவியாளர் ஊதியம் :-

மனுதாரர் சிகிச்சைப் பெற்ற காலங்களில் அவருடன் உதவிக்கு ஒருவர் இருந்து இருக்க கூடும். அவருக்கான செலவை மனுதாரர் மேற்கொண்டிருப்பார். எனவே மனுதாரருக்கு உதவியாளர் தொகையாக ரூ.30,000/- கிடைக்கத்தக்கது எனத் தீர்மானிக்கப்படுகிறது.

ஊனத்திற்கு	ரூ.	1,50,000
மனவலி மற்றும் வேதனைக்காக	ரூ.	50,000
வருமான இழப்பு	ரூ.	30,000
ஊட்டச்சத்து	ரூ.	25,000
ஆடை சேதாரத்திற்காக	ரூ.	1,000
போக்குவரத்து செலவுக்காக	ரூ.	10,000
மருத்துவச்செலவு	ரூ.	1,500
உதவியாளர் ஊதியம்	ரூ.	30,000

மொத்த ம்	**ரூ.**	**2,97,500**

மேற்கண்டவாறு மனுதாரருக்கு மொத்தம் ரூ.2,97,500/- (ரூபாய் இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) ஒட்டுமொத்த இழப்பீடாகக் கிடைக்கத்தக்கது எனத் தீர்மானிக்கப்படுகிறது.

மேற்படி இழப்பீட்டு தொகையில் 50% இழப்பீட்டு தொகையை 1 ஆம் எதிர்மனுதாரரும், 50% இழப்பீட்டு தொகையை 2 ஆம் எதிர்மனுதாரரும் மனுதாரருக்கு கொடுக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

16. இறுதியாக, இம்மனு பகுதியாக செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கு 2 ஆம் எதிர்மனுதாரர் ஒட்டுமொத்த இழப்பீடாக ரூ.2,97,500/- (ரூபாய் இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து ஐநூறு மட்டும்)-மும், அதற்கு மனு தாக்கலான தேதி முதல் தொகை செலுத்தும் காலம் வரை வருடத்திற்கு 7.5 சதவிகித வட்டியுடன் இன்றிலிருந்து 2 மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென உத்தரவிடப்படுகிறது. மேற்படி இழப்பீட்டு தொகையில் 50% தொகையை பின்னிட்டு 1 ஆம் எதிர்மனுதாரரிடமிருந்து 2 ஆம் எதிர்மனுதாரர் வசூல் செய்துகொள்ள வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

PARMINDER SINGH VS HONEY GOYAL AND OTHERS (S.LP.No.(c) No.4484 of 2020) Dated-18.03.2025 வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் அறித்த தீர்ப்பின்படியும் மற்றும் The Hon'ble Court, Madras in ROC.No.55584/2025/S.Ct., dated 02.07.2025 மாண்புமிகு உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டியின்படியும், மேற்படி ரூ.2,97,500/- இழப்பீட்டு தொகையை 2 ஆம் எதிர்மனுதாரர் மனுதாரரின் Name – Krishnan, Bank of Baroda, Arasur, A/c.No.16598100007896, IFSC No.BARB0ARASUR நேரடியாக வங்கி பண மாற்று முறையான NEFT அல்லது RTGS ஆகிய E-Transfer முறையில் செலுத்தவேண்டும் என உத்தரவிடப்படகிறது. மேற்படி தொகையை பின்னிட்டு 1 ஆம் எதிர்மனுதாரரிடமிருந்து 2 ஆம் எதிர்மனுதாரர் வசூல் செய்துகொள்ள வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

TN MACT விதிகள் 1989 இன் விதி 20 துணை விதி 4-ன் படி, மனுதாரர் தனது வழக்கறிஞருக்கு பணம் செலுத்த ரூ.18,375/- வழக்கறிஞர் கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறது. வழக்கறிஞர் கட்டணம் ரூ.18,375/-, மனுதாரர் செலுத்திய நீதிமன்றக்கட்டணம் ரூ.373/- மற்றும் செலவுத் தொகை ரூ.199/-ஆக மொத்தம் ரூ.18,947/-ஐ 2 ஆம் எதிர்மனுதாரர் மனுதாரரின் Name – Krishnan, Bank of Baroda, Arasur, A/c.No.16598100007896, IFSC No.BARB0ARASUR

N VENKATESAN
Digitally signed by N VENKATESAN
Date: 2026.07.31 11:08:26 +0530

நேரடியாக வங்கி பண மாற்று முறையான NEFT அல்லது RTGS ஆகிய E-Transfer முறையில் செலுத்தவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

மனுதாரர் செலுத்தவேண்டிய மொத்த நீதிமன்ற கட்டணம் ரூ.2,348/- மனுதாரர் நீதிமன்றக் கட்டணமாக ரூ.373/- செலுத்தியுள்ளார். மனுதாரர் செலுத்தவேண்டிய இழப்பீடு தொகைக்குரிய குறைவு நீதிமன்றக்கட்டணம் ரூ.1975/- ஆகும். மனுதாரர் செலுத்த வேண்டிய குறைவு நீதிமன்றக் கட்டணம் ரூ.1975/-ஐ 2 ஆம் எதிர்மனுதாரர் தீர்ப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்கு E-Court fees link pay.ecourts.gov.in என்ற இணையதளத்தின் மூலம் செலுத்த வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

மேற்படி இழப்பீட்டு தொகை, வழக்கறிஞர் ஊதியம், வழக்குச் செலவு தொகை, குறைவு நீதிமன்ற கட்டணம் செலுத்தியதற்கான ரசீதை 2 ஆம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

வழக்கு தரப்பினர்களுக்கு சான்றிடப்பட்ட தீர்ப்பு நகல் இலவசமாக வழங்க உத்தரவிடப்படுகிறது.

செலவுத் தொகை பட்டியல்

	மனுதாரர்	ரூ.	2 ம்எதிர்மனுதாரர்	ரூ.
1.	வக்காலத்து	10.00		
2.	படி செலவு	139.00		
3.	ஆவணங்கள் மீது ஸ்டாம்பு	50.00		
4.	நீதிமன்ற கட்டணம்	2,348.00		
5.	வழக்கறிஞர் கட்டணம்	18,375.00		
	மொத்தம்	20,922.00		

இவ்வுத்தரவானது சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைத்திருத்தம் செய்து இன்று 2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 29-ம் நாள் புதன்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N VENKATESAN

Digitally signed by N VENKATESAN
Date: 2026.07.31 11:08:32 +0530

சிறப்பு சார்பு நீதிபதி எண்.1,

(மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை வழக்கு)

சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்.1, விழுப்புரம்.

மனுதாரர் தரப்பு சாட்சி:-

ம.சா.1 - கிருஷ்ணன்

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-

ம.சா.ஆ.1	01.03.2022	முதல் தகவல் அறிக்கை.	உண்மை நகல்.
ம.சா.ஆ.2	-	1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை.	உண்மை நகல்.
ம.சா.ஆ.3	-	1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவுச்சான்றிதழ்.	ஒளி நகல்.
ம.சா.ஆ.4	-	1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு சான்றிதழ்.	ஒளி நகல்.
ம.சா.ஆ.5	-	1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் உரிமம்.	உண்மை நகல்.
ம.சா.ஆ.6	-	1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் அனுமதி சான்றிதழ்.	ஒளி நகல்.
ம.சா.ஆ.7	-	1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் தகுதி சான்றிதழ்.	ஒளி நகல்.
ம.சா.ஆ.8	22.04.2022	இறுதி அறிக்கை.	உண்மை நகல்.
ம.சா.ஆ.9	28.02.2022	விழுப்புரம், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையால் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு.	உண்மை நகல்.
ம.சா.ஆ.10	15.03.2022	விழுப்புரம், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையால் வழங்கப்பட்ட விடுவிப்புச்சான்றிதழ்.	ஒளி நகல்.
ம.சா.ஆ.11	28.02.2022	சி.டி.ஸ்கேன் ரிப்போர்ட். (Chest).	அசல்.
ம.சா.ஆ.12	28.02.2022	சி.டி.ஸ்கேன் ரிப்போர்ட். (Abdomen & Pelvis).	அசல்.
ம.சா.ஆ.13	01.03.2022	சி.டி.ஸ்கேன் ரிப்போர்ட். (Pelvis & Hip).	அசல்.
ம.சா.ஆ.14	-	மருத்துவ செலவு ரசீதுகள்.	அசல்.

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:-

எ.ம.சா.1 .. அசோக்குமார்

N VENKATESAN
Digitally signed by N VENKATESAN
Date: 2026.07.31 11:08:38 +0530

எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :-

எ.ம.சா.ஆ.1	-	இரு சக்கர வாகனத்திற்கு வழங்கப்பட்ட Package Policy விவரம்.	ஒளி நகல்.
எ.ம.சா.ஆ.2	04.01.2025	2 வது எதிர்மனுதாரர் வழக்கறிஞர் 1 வது எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு.	அசல்.
எ.ம.சா.ஆ.3	-	மேற்படி அறிவிப்பை 1 ஆம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொள்ளாமல் திரும்ப வந்த தபால் உறை.	அசல்.
எ.ம.சா.ஆ.4	06.12.2023	06.12.2023 அன்று குற்ற எண்.254/2023 ஆயிரம் விளக்கு காவல் நிலையத்தார் சந்தேகத்திற்கிடமான வாகனங்களின் எண் மற்றும் உரிமையாளர் பெயர் கொண்ட ஆவணம்.	ஒளி நகல்.
எ.ம.சா.ஆ.5	-	மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு நகல்.	ஒளி நகல்.
எ.ம.சா.ஆ.6	-	மோட்டார் வாகன அலுவலகத்தில் பெறபட்ட TN-11-X-0389 மேற்படி வாகன எண்ணின் Black list.	
எ.ம.சா.ஆ.7	21.10.2022	2 வது எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனம் 1 ஆம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய கடிதம்.	ஒளி நகல்.
எ.ம.சா.ஆ.8	31.12.022	2 வது எதிர்மனுதாரர் பாலிசி ரத்து செய்ததற்கு விளக்கம் கூறி தாம்பரம் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பிய கடிதம்.	ஒளி நகல்.

நீதிமன்ற சான்றாவணம்:-

நீ.ம.சா.ஆ.1	-	விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவர் குழு வழங்கிய ஊனச்சான்றிதழ்/அறிக்கை.

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2026.07.31 11:08:45 +0530

சிறப்பு சார்பு நீதிபதி எண்.1,

(மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை வழக்கு)

சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்.1, விழுப்புரம்.